## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

**அ.சா. 1 (LW 1 )**

| **பெயர்** | சாந்திஷீலா | **தொழில்** | |
|---|---|---|---|
| க/ **பெயர்** | ரகுவேல் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **12.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

(ஹிந்தி **மொழிபெயர்ப்பாளர் பி.அரவிந்தன் முன்பு விசாரணை நடத்தப்பட்டது . விசாரணை மொழி பெயர்த்து எதிரிகளுக்கு ஹிந்தி மொழியில் விளக்கி சொல்லப்பட்டது. )**

1வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வடமதுரை வேல்வார்கோட்டையில் . நான் மருத்துவமனையில். வேலை செய்கிறேன். வழக்கில் இறந்து போன ராம்குமார் என் சகோதரன். என் சகோதரன் கொத்தனார் வேலை பார்த்து வந்தார். கடந்த 24.08.2022 அன்று ராம்குமார் வீட்டிலிருந்து மூனான்டிபட்டிக்கு சென்று வருவதாக கூறி சென்றார். அப்போது என் உறவினரான நாகேந்திரன் தொலைபேசி வாயிலான என்னிடம் ராம்குமார் இரு ஹிந்தி தெரிந்த நபர்களுடன் சண்டையிட்டு கொண்டிருப்பதாக கூறினார். நான் உடனே நாகேந்திரனிடம் சண்டையை விலக்கிவிட்டு அவனை வீட்டுக்கு அனுப்பி வைக்குமாறு சொன்னேன். ஆனால் ராம்குமார் அன்று இரவு வீட்டிற்கு வரவில்லை. மறுநாள் காலையில் நானும் நாகேந்திரன் மகன்களும் ராம்குமாரை தேடினோம். ராம்குமார் கிடைக்கவில்லை. 26.8.2022 அன்று வடமதுரை சென்று வந்தவர்கள் என்னிடம் காவேரி மில் அருகில் ஒரு நபரை அடித்து புதருக்குள் போட்டிருப்பதாக சொன்னார்கள். நானும் என் அப்பாவும் போய் அந்த இடத்தை பார்த்தேன். நாங்கள் போய் பார்த்த போது காயம்பட்டு புதருக்குள் இருந்த நபர் என் சகோதரர் எனஅடையாளம் கண்டேன். அப்போது அவர் உடம்பில் இடது பக்க தலையிலும், காலிலும், காதிலும், காயம் இருந்தது. இது சம்மந்தமாக வடமதுரை காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான் .**அது அ.த.சா.ஆ.1. ஆகும்.**

என் தம்பி இறந்த பின்பு நான் என் உறவினர்களிடம் விசாரித்துக் கொண்டு காவல்நிலையத்தில் வைத்து எதிரிகளை நேரில் பார்த்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,2எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் முத்தனங்கோட்டையில் வசித்து வருகிறேன். வேல்வார்கோட்டையில் வசிப்பதாக சொன்னால் அது தவறு . முத்தனங்கோட்டையில் நான் என் அம்மா,அப்பா, என் தம்பி ராம்குமார், அவரது பிள்ளைகள், எனது பிள்ளைகள் ஆகியோருடன் வசித்து வருகிறேன். என் அப்பா வீட்டில்தான் இருக்கிறார். என் தம்பி ராம்குமார் யாருடன் வேலைக்கு செல்வார் என்றால் வேலைக்கு யார் கூப்பிட்டாலும் செல்வார், பெயர் குறிப்பிட்டு சொல்ல முடியாது. என் தம்பிக்கு மதுகுடிக்கும் பழக்கம் உள்ளது. மதுகுடித்து விட்டு என் தம்பி வடமதுரை காவல்நிலையத்தில் புகாராகி விசாரணைக்கு சென்று வருவார் என்றால் தெரியாது. குடித்து விட்டு எங்களுடன் சண்டையிடுவார் என்றால் சரிதான். என் தம்பி வேலைக்கு செல்லாத நாட்களில் குடித்து விட்டு யார் யாருடன் சண்டையிட்டு வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவ தினத்தன்று என் வீட்டில் நான் என் அம்மா, அப்பா என் பிள்ளைகள் ஆகியோர்கள் மட்டுந்தான் இருந்தோம். என் தம்பி ராம்குமார் 24.08.2022 அன்று என்னிடம் எங்கு செல்வதாக குறிப்பிட்டு செல்வதாக சொல்லி சென்றார் என்றால் மூனான்டிபட்டிக்கு செல்வதாக சொல்லி சென்றார், நேரம் எனக்கு சரியாக தெரியாது. என் தம்பி என்னிடம் சொல்லி செல்லும் போது மது அருந்தவில்லை. மூனான்டிபட்டி எங்கள் ஊரிலிருந்து 1 1/2 கிமீ தொலைவில்தான் உள்ளது. எங்கள் வீட்டிலிருந்து முத்தனங்கோட்டை பஸ்ஸ்டாப் 1 கிமீ தொலைவில் உள்ளது. அங்கிருந்த 1/2 கிமீ சென்றாலே முத்தனங்கோட்டை வந்து விடும். என் தம்பி என்னிடம் சொல்லிவிட்டு எந்த வண்டியில் சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வீட்டிலிருந்து என்னிடம் சொல்லி விட்டு எங்கு சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நாகேந்திரன் எனக்கு மாமா மகன் ஆவார். அவருக்கு 34 வயது ஆகிறது. அவருக்கு 4 பிள்ளைகள் இருக்கிறார்கள். அவருடைய மூத்தபிள்ளைக்கு 14 வயது இருக்கும். மற்ற பிள்ளைகள் சிறு பிள்ளைகள் ஆவார்கள். நாகேந்திரன் எனக்கு எத்தனை மணிக்கு போன் செய்தார் என்று தெரியாது. சுமார் 07.00 லிருந்து 08.00மணியிருக்கும். எந்த எண்ணிலிருந்து போன் செய்தார் என்று என்னால் சொல்ல இயலாது. நாகேந்திரன் எனக்கு போன் செய்த விவரத்திற்கு என் போன் கால் லிஸ்ட் எதுவும் கேட்டு வாங்கவில்லை. நாகேந்திரன் மூனான்டிபட்டியில் ஊருக்குள்தான் குடியிருந்து வருகிறார். நாகேந்திரன் ஆயில்மில்லில் வேலை பார்க்கிறார். எந்த மில் என்று தெரியாது. நாகேந்திரனுக்கு எத்தனை மணிக்கு வேலை முடிந்து எங்கிருந்து எங்கு

சென்றார் என்ற விவரம் சொல்லவில்லை. நாகேந்திரன் எங்கிருந்து என் தம்பியை பார்த்தார் என்று சொல்லவில்லை என்றால் மூனான்டிபட்டி பேருந்து நிறுத்தத்தில் பார்த்ததாக சொன்னார், தொலைவு விவரங்கள் பற்றி சொல்லவில்லை. மூனான்டிபட்டி பேருந்து நிறுத்தத்தில் எந்த இடத்தில் என்று வீடுகளோ, கடைகளோ என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. சண்டைபோடும் நபர்கள் பற்றி எதுவும் என்னிடம் சொல்லவில்லை,. எவ்வளவு நேரமாக சண்டை போடுகிறார்கள், எதற்காக சண்டை போடுகிறார்கள் என்றும் சொல்லவில்லை. நாகேந்திரனிடம் நான் சண்டையை விலக்கிவிட்டு என் தம்பியை கூட்டி வரச் சொன்ன பின்பு நாகேந்திரன் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. நானும் நாகேந்திரனிடம் போன் செய்து எதுவும் கேட்டு எதுவும் தெரிந்து கொள்ளவில்லை, அன்று இரவு என் தம்பி வீட்டிற்கு வராதது சம்மந்தமாக வடமதுரை காவல்நிலையத்தில் புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை. முத்தனங்கோட்டை கிராமத்திலிருந்து வடமதுரை காவல்நிலையம் 3 கிமீ தொலைவில் உள்ளது. சம்பவ காலத்தில் நான் வங்கியில் வணி தொடர்பாளராக வேலை செய்து வந்தேன். ஒரு நபரை காணாவிட்டால் உடனடியாக புகார் காவல்நிலையத்தில் கொடுக்க வேண்டும் என்பது எனக்கு நன்கு தெரியும். மறு நாள் வடமதுரையில் ஒயின்சாப் அருகே, பேருந்து நிறுத்தம் அருகே, மூனான்டி பட்டி, சிவா மில்ஸ்டாப்பில் தேடி பார்த்தேன். நானும் நாகேந்திரனும் தேடி போனோம். தேடி சென்றோம், மணி தெரியவில்லை. வடமதுரை பஸ்ஸ்டாப் அருகேதான் காவல்நிலையம் உள்ளது. தேடிச் சென்ற அன்றைய தினமாவது வடமதுரை காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. என் தம்பி பற்றி யாரும் தகவல் சொல்லவில்லை. காலை 09.00லிருந்து 09.30 மணியிருக்கும். நானும் எனது அப்பாவும் சென்றோம், நான் வழிப்போக்கர் ஒருவருடன் வண்டியில் சென்றேன். என் அப்பா நடந்தே வந்து விட்டார். என் தம்பி கிடந்த இடத்திற்கும் மூனான்டி பஸ்ஸ்டாப்பிற்கும் இடையே 1 1/2 கிமீ தூரம் இருக்கும். நான் போகும் போது மக்கள் கூட்டமாக இருந்தார்கள். வடமதுரை போலிசார் இருந்தார்கள். நான் போய் பார்க்கும் போது ராம்குமாரின் தலை எந்த திசையில் இருந்தது என்று கவனிக்கவில்லை. ஏற்கனவே ஆட்கள் கூட்டமாக இருந்ததால் சம்பவ இடத்தில் தடயங்கள் ஏதும் இருந்ததாக எதுவும் தெரியவில்லை. வடமதுரை போலிசார் என்னை காரில் வடமதுரை காவல்நிலையம் அழைத்து சென்றார்கள். குறிப்பாக எத்தனை மணி என்று தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து நான் புகாரை எழுதும் போது எத்தனை மணி என்று ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் வைத்து தான் எதிரிகள் இருவரையும் போலிசார்அடையாளம் காட்டினார்கள். புகார் கொடுத்த போது என் அப்பா கூட வந்தார். புகார் கொடுக்க சென்ற என்னிடமும், என் அப்பாவிடமும் எதிரிகள் இருவரையும் போலிசார் அடையாளம் காட்டினார்கள். எதிரிகளிடம் நான் எதுவும் பேசவில்லை. எங்கள் முன்பு எதிரிகளை போலிசார் விசாரித்தார்கள். அவர்கள் ஹிந்தியில் பேசியதால் அவர்கள் என்ன பேசினார்கள்

என்பது எனக்கு தெரியவில்லை. நான் போலிசார் சொல்லிக் கேட்டுக் கொண்டதன் பேரில் என் தம்பியுடன் ஹிந்தி பேசுபவர்கள் சண்டையிட்டதாக புகாரில் பொய்யாக எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சி பெரியசாமி எனது மாமா. சாட்சி அழகர் சாமி எனது தந்தை ஆவார், சாட்சி முனியம்மா எங்கள் ஊரைச் சேர்ந்த கவுன்சிலர் ஆவார். சாட்சி மோகன் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் ஆவார். சாட்சி செல்வம் எங்கள் ஊர்க்காரர் ஆவார். முத்துப்பாண்டி எங்கள் ஊரைச் சேர்ந்தவர், ரகுவேல் எனது கணவர் ஆவார். இவர்கள் அனைவரும் காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தார்கள். மேற்படியார்களை வடமதுரை காவல்நிலையம் வரச்சொல்லி சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டார்கள், அவர்களிடம் கேட்டு கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள். போலிசார் கேட்டதின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:15:59 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.